விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 | தை 17 | ஜ- அவ் 8 | இதழ் 346
யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 30-1-1985

கடல் கண்காணிப்பையும் மீறி—

## மேலும் 30 இலங்கைத் தமிழர் தமிழ்நாட்டில் தஞ்சம்

[சென்னை]

தஞ்சாவூரிலுள்ள வேதாரணியத்துக்கு படகொன்றில் 30பேர் கொண்ட இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வந்துசேர்ந்துள்ளனர்.

இம் முப்பது பேரில் ஆறு பெண்ணும், சிறுவர்கள் வயோதிபர்கள் சிலரும் அடங்குகின்றனர்என்று தெரிவிக்கப்பட்டது.

மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் இவ்இலங்கைத் தமிழர்கள் அண்மைக்காலமாக இலங்கையின் வடபகுதியில் பலத்த கஷ்டங்களுக்குள்ளாகியிருந்தனர் என்றும் இலங்கைக் கடற்படையின் பலத்த கண்காணிப்பையும் மீறி இவர்கள் தமிழ்நாடு வந்துள்ளனர் என்றும் கூறப்பட்டது.

தற்போது இந்த 30தமிழ் அகதிகளும் தஞ்சாவூரில் அகதிகள் முகாமொன்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. [கி]

## பலியான இருவருக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

அரியாலையில், ராணுவத்தினரின் துப்பாக்கி சூட்டுக்கு பலியான இரா உதயகுமார், ஸ்ரனிஸ் ஆகியோருக்கு அஞ்சலி தெரிவித்து தமிழீழ விடுதலை இயக்கம் துண்டுப் பிரசுரம் வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக செயலாற்றிய லெப்டினன்

(4-ம் பக்கம் 4-ம் கலம் பார்க்க)

ஹட்டன் நேஷனல் வங்கியில்—

# எஞ்சியிருந்த நகைகளும் நேற்று கொள்ளை!

## முகாமுக்கு கொண்டு செல்ல ஏற்பாடானபோது சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஹட்டன் நேஷனல் வங்கி லொக்கர்களில் மிஞ்சியிருந்த சுமார் ஒருகோடி ரூபாவிற்கு மேல் பெறுமதியான நகைகள் இனந்தெரியாத துப்பாக்கி இளைஞர்களால் நேற்று பிற்பகல் கொள்ளையடித்து செல்லப்பட்டது.

நகைகள் இருந்த 59 லொக்கரை கொண்ட இரு பெட்டகங்களை பாதுகாப்பாக இராணுவ முகாமிற்கு நேற்று பிற்பகல் கொண்டு செல்ல வங்கி ஒழுங்கு செய்திருந்ததாகவும், நேற்று பிற்பகல் 3மணியளவில் ட்ராக்டர் ஒன்றும் இரும்பு பெட்டகங்களை தூக்கி ஏற்றுவதற்கு வேலையாட்களும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

ட்ராக்டரில் வேலையாட்கள் இரும்பு பெட்டகங்களை ஏற்ற முயற்சித்துக் கொண்டிருந்த சமயம், இனந்தெரியாத இருவர் பின்பக்க வாசலால் உள்ளேவந்து வங்கி முகாமையாளரையும், ஊழியர்களையும்

(4-ம் பக்கம் 4-ம் கலம் பார்க்க)

## தனியார் விமானசேவையும் இனி நடக்காது!

[யாழ்ப்பாணம்]

பலாலி விமான நிலையத்தில் இதுவரைகாலமும் நடந்துவந்த தனியார் போக்குவரத்து விமான சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 10-30மணி முதல் தனியார் போக்குவரத்து விமான சேவைக்குபாதுகாப்புஅமைச்சு தடைவிதித்துள்ளது.

விமானப்படை விமானங்கள், மற்றும் ஆயுதப்படையினரின் விமானங்கள் இறங்குவதற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது

## எழும்பூரில் தி.மு.க. வெற்றி

(சென்னை)

தமிழ்நாடு எழும்பூர் சட்டப்பேரவைத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் திரு எஸ் பாலன் வெற்றி பெற்றிருட்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பேரம்பூர் சட்டப் பேரவைத் தொகுதியிலும் திராவிட முன்னேற்றக்கழக வேட்பாளர் திரு. பரிதி இளம் வழுதி அ.தி.க.மு. வேட்பாளர் திருமதி சத்தியவாணிமுத்துவை விடபன் மடங்கு வெற்றிவாய்ப்புடன் முன்னணியில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

[4-ம் பக்கம் 5ம்-கலம் பார்க்க]

## இந்திய மீனவர்கள் தாயகம் சேர்ந்தனர்

சென்னை ஜன. 29

கடந்த அக்டோபர் மாதம் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர் 17 பேரும், 16 படகுகளும் இந்தியக் கடலோர காவல்படையினரிடம் நேற்று கையளிக்கப்பட்டனர்.

15 படகுகள் இராமேஸ்வரம் சென்றுவிட்டதாகவும், ஒரு படகு வரும்வழியில் கடலில் உடைந்துபோய்விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மீனவர்கள் 17 பேரும் இராமேஸ்வரம் கரையை அடைந்த பொழுது அவர்களது குடும்பத்தினரும் உறவினர்களும்

(4-ம் பக்கம் 5-ம்கலம் பார்க்க)

## திருமலை, பட்டிருப்பில் சிறிலங்கா போட்டியிடாது

(கொழும்பு)

முல்கிரிகல இடைத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி போட்டியிடுவதென முடிவு செய்துள்ளது, ஆனல் திருகோணமலை, பட்டிருப்புத் தொகுதிகளில் அக்கட்சி போட்டியிடாது.

பட்டிருப்புத் தொகுதியில் யு என், பி வேட்புமனு தாக்கல் செய்யும் பட்சத்தில் சுயேச்சையொருவரை நிறுத்த தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்கள் ஆலோசித்துள்ளதாகக்கூறப்படுகின்றது.

## பலாலி விமானநிலையத்துக்கருகில் வீடுகளை விட்டு பலர் வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலையத்துக்குஅண்மையிலுள்ளகுடிசை ஒன்றும் வேலியும் ஆயுதப் படையினரால் தீவைக்கப்பட்டுள்ளதாகப் புகார்செய்யப்பட்டுள்ளது.

இதனல் அங்கிருந்தவர்கள் தஞ்சம் கோரி வேறிடத்துக்குச் சென்றுவிட்டனர்.

இப்பகுதியில் பிரதானவீதிக் கருகாமையில் உள்ள வீடுகளிலிருந்தவர்களும் பீதியினல் வேறிடங்களுக்கு தஞ்சம்கோரி சென்றுள்ளனர். (மா)

அச்சுவேலியில்

## இரு கட்டிடங்கள் தகர்க்கப்பட்டன!

(யாழ்-கோப்பாய்)

அச்சுவேலிப் பகுதியிலுள்ள கிராம அபிவிருத்தி பயிற்சி நிலையத்துக்குச் சொந்தமான இருகட்டிடங்கள் இனந்தெரியா நபர்களால் நேற்று நண்பகல் இருகுண்டுகள் வைத்து தகர்க்கப்பட்டுள்ளன்

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஆயுதப்படையினர் இக்கட்டிடங்களைப் பார்வையிட்டுச் சென்றனராம்.

(மா)

புற்றுநோய்க்கு சிகிச்சையளிக்கும்

## கோபால்ட் கதிர்வீச்சுக் கருவி மகாரகமவுக்குச் செல்கிறது!

(ஏ. வி மாணிக்கம்)

வடபகுதியில் புற்றுநோயாளாருக்கு சிகிச்சை அளிப்பதற்கென தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் கட்டப்பட்ட புற்று நோய்ச்சிகிச்சை நிலையத்தின் கதிர்வீச்சு (கோபால்ட் யூனிட்) ஹான்ரில் இராணுவ பாதுகாப்புடன் மகாரகவுக்கு நேற்று எடுத்துச்செல்லபபட்டுள்ளது.

சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான இந்த உபகரணத்தை கனடாஅன்பளிப்பாக வழங்கியிருந்தது.

கொழும்பிலுள்ள கனடா அரசாங்கத்தின் தூதுவர் காரியாலயத்தில் தங்கியிருக்கும் இருபொறியியலாளர்கள் விமானமூலம் அழைத்துவரப்பட்டு, இந்தகதிர்வீச்சு உபகரணத்தை இயந்திரத்திலிருந்து பிரித்தெடுத்தார்கள்

அச்சமயம் இராணுவத்தினர் கவசவண்டிகள் சகிதம் ஆஸ்பத்திரியை சுற்றிவளைத்துப் பாதுகாப்பளித்தனர்.

கதிர் வீச்சு உபகரணம் கழற்றி எடுக்கப்பட்டதும் காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து கப்பல் மூலம் கொழும்புக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

மகரகம புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் இயங்கும் மேற்

(4-ம் பக்கம் 3-ம் கலம்பார்க்க)

## தாவடிமயானத்தில் இளம் பெண் சடலம்

(யாழ்ப்பாணம்)

தாவடி மயானத்தில் புதைக்கப் பட்டிருந்த இளம் பெண் ஒருவரின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அடையாளம் காண்பதற்காகவைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இப்பெண்ணின் சடலம்புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

## நல்லூரில் நேற்றுச் சில இளைஞர்கள் கைது

[கல்வியங்காடு]

நல்லூர் ஆலயத்தின் பின் வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் இருவரை நேற்று ராணுவத்தினர் அழைத்துச் சென்றனர். மோட்டார் சைக்கிள் அதே இடத்தில் கிடந்தது.

அவ்வீதி வழியாக சைக்கிளில் வந்த 4 பேரையும் ராணுவத்தினர் கைது செய்து கொண்டு சென்றனர்.

பருத்தித்துறை வீதியில் சட்டநாதர் சிவன்கோயிலுக்கருகில் சைக்கிளில் வந்த இரு

[4-ம் பக்கம் 2ம் கலம் பார்க்க]

## தடைபட்ட பரீட்சைகள் பெப்ரவரி இறுதியில்!

(யாழ்ப்பாணம்)

கடந்த டிசம்பர் மாதம் நடைபெறுமலிருந்த கணித, விஞ்ஞான பாடப்பரீட்சைகள் பெப்ரவரி இறுதிவாரத்தில் நடைபெறும்,

ஊரடங்கு சட்டம் அமுல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து க பொ. த. சாதாரண) பரீட்சையில் இவ்விரு பாடங்களும் நடைபெறவில்லை.

க பொ. த. (சாதாரண) பரீட்சையில் குழப்பப்பட்ட

(4-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க]

# விளம்பரம்

## விற்பனைக்கு

புத்தம் புதிய Honda C 70 (எக்கொனமிக் பவர்) உடன் விற்பனைக்குண்டு ப. மகேந்திரன், 28, புது வீதி அத்தியடி 1582

இரண்டு உஷா சீலிங் மின் விசிறிகளும் [Ceiling Fans] இரண்டு G. I. Pipe சகிதம் T. V. அன்ரெனுவும் உடனடி விற்பனைக்குண்டு. தொடர்பு:- 74, நல்லூர் குறுக்குத் தெரு, நல்லூர். 1579

ஆனைக்கோட்டை கொக்குவில் றோட்டில் 11 பரப்புக் காணி வீடு கட்டக்கூடியது உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- கு. ரவீந்திரன், அதிகார் வளவு, ஆனைக் கோட்டை. 1578

மானிப்பாய் முதலாம்குறுக்குத்தெரு இணுவில் றோட்டில் மூன்றுபரப்புக் காணியும் சிறிய வீடும் விற்பனைக்கு உண்டு. விரும்பினோர் கீழ்க் கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும். பசுபதி கந்தசாமி முதலாம் குறுக்குதெரு இணுவில் றோட், மானிப்பாய். 1569

ஒரு பரப்பில் முன்னிணைப்பு மின்சாரம், தண்ணீர் வசதியுடன் யாழ். மாநகரசபை எல்லைக்குள் கைத்தொழில் ஸ்தாபனமாகவோ, ஸ்ரோராகவோ, வீடாகவோ, பாவிப்பதற்கு ஏற்ற புதியகட்டடம் விற்பனைக்குண்டு துர்க்காஸ் 185/1 கில்னர் லேன், கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். 1576

சொற்பகாலம் பாவித்த நஷனல் 20'' கலர் T. V. நஷனல் Rice Cooker, Sisil, குளிர்சாதனப் பெட்டி (R-80) Fidelity Record Player, மற்றும் புதிய நஷனல் மின்சார Automatic Oven, Russel Hobbs மின்சாரகேத்தல்உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ''கமல வாசா'' நந்தாவில், கொக்குவில் (சம்பியன் லேன் ஊடாக). 1592

### கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம் பரந்தன்

## கேள்வி விண்ணப்பம்

## வெற்றுச் சாக்குகள்

எமது சங்கத்தில் உள்ள வெற்றுச் சாக்குகளுக்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் செய்ய விரும்புபவர்கள் சாக்குகளை நேரில் பார்வையிட்டு விண்ணப்ப வைப்புப் பணம் ரூபா.110/-(ரூபா.100/-திருப்பி வழங்கப்படும்) செலுத்தி, விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி பதிவுத் தபால் மூலம் ''பொதுமுகாமையாளர்' கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம், பரந்தன்.'' என்ற முகவரிக்கு 16 02.85 க்குப் பிந்தாமல் (கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்ப விபரத்தினை எழுதி அனுப்புதல் வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**

கரைச்சி வடக்கு<br>ப.நோ.கூ. சங்கம்<br>பரந்தன்.

1580

## தேவை

கேற் கிறில் செய்வதில் அனுபவம் உள்ள வெல்டரும் முழுவதையும் பாரம் எடுத்துக் கொமிசனுக்கு வேலை செய்யக் கூடிய வெல்டரும் தேவை நேரில் தொடர்பு கொள்ளவும். ''துர்காஸ்'' 130, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். 1577

## தவறிவிட்டது

புங்குடுதீவு 2-ம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் பரராசசிங்கம் என்பவருடைய அடையாள அட்டை இல:- 350871128V தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் குறிப்பிட்ட பெயரில் தொடர்பு கொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1575

ஏழாலை, மகாவித்தியாலய முன் வீதியில், திறப்புக் கோர்வை ஒன்று (5திறப்புகள்) சென்ற வாரம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி பாடசாலை முன்னுள்ள கடையில் தயவுசெய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 1590

## கேள்விப்பத்திரம் கோரல்

பனங்காமம் பற்று பல நோ. கூட்டுறவுச் சங்கத்தில் பின்வரும் பொருட்கள் கேள்விப்பத்திர மூலம் விற்பனை செய்ய இருப்பதால் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் மீளளிக்கப்படும் வைப்புப்பணமாக ரூபா 100/ம் மீளளிக்கப் படாத வைப்புப்பணமாக ரூபா 25/-ம் செலுத்தி சங்கத்தால் வழங்கப்படும் கேள்விப் பத்திரத்தை பெற்று தலைவர் பனங்காமம் பற்று பல. நோ. கூட்டுறவுச் சங்கம் வவுனிக்குளம் என்ற முகவரிக்கு ஒவ்வொரு பொருளுக்கும் தனித் தனியாக விண்ணப்பங்களை அனுப்புவதுடன் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பொருளின் பெயரை குறிப்பிட்டு 20-2-85க்கு முன்னதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படவேண்டும்.

(1) அரிசிஆலைக்கு பாவிக்கக்கூடியது (புதிய) பெட்டி (Packing)

உடைக்கப்பட்ட லிஸ்டர் (Lester) என்ஜின் (Water Cool)

சிலின்டர் (Cylender)—3

குதிரைசக்தி (H. P.) 32500

சுழற்சி (R P M.) 1500

(2) வெற்றுச்சாக்கு— 1500

(3) பழைய காகிதாதி 150 கிலோவிற்கு மேற்பட்டது

பொருட்களை பார்க்க விரும்புபவர்கள் வேலை நாட்களில் காலை 8-00 மணியில் இருந்து பி. பகல் 5-00 மணிவரை பார்வையிடலாம்.

கூட்டுறவுச்சேவையிலுள்ள<br>**சா. வனஜா**<br>பொதுமுகாமையாளர்

1589

## இணைப்புச்சேவை

[கரவெட்டி]

அண்மையில் தகர்க்கப்பட்ட வல்லைப் பாலம் அமைந்துள்ள பருத்தித்துறை-யாழ்.பிரதான வீதியில் தற்போது ஈரிணைப்புத் தனியார் பஸ் சேவைகள் நடைபெறுகின்றன.

வ. பி. போ. சபை பஸ் சேவைகள் தொண்டமானாறு பாலத்தினூடாக (தற்போது தற்காலிக முகாம் அமைந்துள்ள பகுதி) நடைபெறுகிறது.

## பிரிவுபசாரம்

(சுண்டுக்குளி)

யாழ். செயலக விதவைகள் ஒய்வூதியக் கிளையில் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு ரி. சச்சிதானந்தம் அக் கிளையின் லிகிதர் திரு. எஸ் தம்பிப்பிள்ளை இம்மாதத்திலிருந்து இடமாற்றலாகிச்செல்வதையிட்டு பிரிவுபசார விழாவொன்று அக்கிளையின் ஊழியர்களால் நடாத்தப்பட்டது திரு. சச்சிதானந்தம் முன்பு யாழ். கடவுச் சீட்டுக்கிளை விசாரணைகள் பகுதிக்குப் பொறுப்பாக இருந்துள்ளார். தற்போது ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார்.

## பஞ்சுக்குத் தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ் அரசினர் வைத்திய சாலையில் பஞ்சுக்குப் பெரும் பஞ்சமேற்பட்டுள்ளது.

வார்ட்டுகளில் தங்கியிருக்கும் நோயாளர்களுக்குத் தேவையான பஞ்சு, பிளாஸ்ரர் ஆகியவற்றைத் தனியார் கடைகளில் வாங்கிக் கொடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மருந்துத் தட்டுப்பாட்டினால் யாழ். அரசினர் வைத்திய சாலைக்குச் செல்லும் நோயாளர்களுக்குப் பூரணத்துவமான சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாகக் கூறப்படுகின்றது.

## பனம் பொருள் கைப்பணி பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கல்வி மூலவள நிலையமும் இலங்கை பனம் பொருள் அபிவிருத்திச் சபையும் இணைந்து நடாத்திய பனம் பொருள் கைப்பணிப் பயிற்சியில் 24 யுவதிகள் பயிற்சியை முடித்துள்ளார்கள். மேலும் 32 யுவதிகளைக் கொண்ட இரண்டாவது குழுவினர் அண்மையில்கைப்பணிப் பயிற்சியை ஆரம்பித்துள்ளனர்.

இப்பயிற்சி நெறியை உற்பதி உத்தியோகத்தர் திரு. கே. சிவகணேசன் ஆரம்பித்து வைத்தார். முதலாவது பயிற்சியாளர்களிடையே போட்டி ஒன்று நடாத்தி முதல் மூவரையும் தெரிந்தெடுப்பதென கோப்பாய் கல்வி மூலவள நிலையப் பொறுப்பதிகாரி திரு எஸ் சி எஸ். சிதம்பரநாதன் தெரிவித்தார்.

### சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## ஆதனவரி விளம்பரம்

1985-ம் ஆண்டுக்குரிய ஆதனவரியை முழுமையாக 31-01-1985-ந் திகதிக்கு முன் செலுத்துவோர்களுக்கு, செலுத்தப்பட வேண்டிய தொகையில் பத்து வீதம் (10% கழிவு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, 31 01-85 ந் திகதி வியாழக்கிழமை பகல் 12-00 மணிக்கு முன்பாக இவ்வலுவலகத்தில் வரிகளைச் செலுத்தி குறிப்பிட்ட வரிச் சலுகையைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

த. நவரத்தினராசா,<br>செயலாளர்,<br>நகராட்சிமன்றம்,<br>சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,<br>சாவகச்சேரி,<br>18-01-1985. 1593

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்ய

---

### யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

420 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

### அங்கத்தவர்களுக்கு

## அறிவித்தல்

பல அங்கத்தவர்களின் வேண்டுகோளிற்கிணங்க புதிய பங்குகளுக்கான விண்ணப்பங்களை, பெற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி 1985 பெப்ரவரி 28 வரை நீடிக்கப்பட்டுள்ளதென்பதைஅறியத்தருகிறோம்.

இயக்குநர்சபை கட்டளைப்படி,<br>யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம்<br>ஞா. சிறீ மனோகரன்<br>செயலாளர்

யாழ்ப்பாணம்<br>1985 ஜனவரி 30ம் திகதி.

(1591)

---

உ

## திருமண அழைப்பு

மணமகன்: திருவளர் செல்வன்<br>**கை. ஸ்ரீரங்கநாதன்** (E. )

மணமகள்: திருவளர் செல்வி<br>**ஸ்ரீரதிராணி**

இடம்:<br>நீர்வேலி கந்தஸ்வாமி தேவஸ்தானம்

நேரம்:<br>1-2-1985 வெள்ளிக்கிழமை<br>காலை 9-00 மணி முதல் 10-15 மணிவரை

வரவேற்புபசாரம்: (மணமகனில்லம்)<br>மாலை 4-00 மணி முதல் 3 நாட்கள்வரை நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடுவோர்

த. பஞ்சரெட்ணம் தம்பதிகள்,<br>உரும்பிராய் தெற்கு,<br>உரும்பிராய்

வ. கைலாசம்,<br>''செல்வமலரகம்'',<br>109, கச்சேரி நல்லூர் றோட்,<br>யாழ்ப்பாணம்.

(1438) சுபம்

---



## இன்று மகாத்மா காந்தி நினைவு தினம்

**காலம் பெறுமதியானது**

வீணே கழியும் ஒரு நிமிடத்தையேனும் மீட்டு உபயோகிக்க முடியாது எனினும் இதையறிந்த பின்னும் எவ்வளவு நேரத்தை வீணாக்குகிறோம்.

— மகாத்மாகாந்தி.

உள்ளூர் மூலப்பொருட்களை உற்பத்திக்கு எடுப்போம் உள்ளூர் தயாரிப்புகளுக்கு ஆதரவு கொடுப்போம்.

10 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி அழகிய மகாத்மா காந்தியின் ஸ்ரிக்கர் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்

மில்க்வைற் — யாழ்ப்பாணம்.

---

### எல்லாநாடுகளுக்கும் செல்வதற்கான சகல பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்

பேர்ளின் (BERLIN) செல்வதற்கு<br>ரூ. 14.500/00 — நிகர (Nett)

## அமெரிக்கன் லொயிட்

(சிலோன் வரையறுக்கப்பட்டது)

## AMERICAN LLOYED

CEYLON LTD.

151, தர்மபால மாவத்த<br>கொழும்பு-07<br>தொலைபேசி;<br>20344, 26911, 28347

W-4, 5ம் மாடி<br>சிலிங்கோ ஹவுஸ்<br>கொழும்பு-1, தொலைபேசி:<br>24494, 28892, 29806

**பிரயாண ஒழுங்கு பிரதிநிதிகள்**

யாழ்ப்பாணம்:- பொதுமுகாமையாளர், வின்சர் திரையரங்கம்,<br>ஊர்காவற்றுறை:- திரு. S.A E. இரட்ணராஜா,<br>சில்லாலை:-வைத்தியகலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி,<br>பருத்தித்துறை;- வண. S. S. கருணைராஜ், மெதடிஸ்ற் குருஸ்தானம்.

(1375)

## இன்று மகாத்மா காந்தியின் 39-வது நினைவு தினம்:

# அஹிம்சை அசாத்தியமா?

தொடக்க உரையில் மகாத்மா காந்தி அஹிம்சா தர்மத்தின் அடிப்படைக் கோட்பாட்டை அறிமுகப்படுத்துகிறார்

"நியூற்றன் போன்ற சிறந்த விஞ்ஞான மேதைகளுக்கும் வெலிங்டன் போன்ற ராணுவ அதிபதிகளுக்கும் மிக மேலான வர்களே அஹிம்சை என்ற தத்துவத்தை நிறுவிய ரிஷிகள்.

படை பயிற்சியின் அனுபவம் கண்டு அதன் பலவீனத்தை உணர்ந்ததின் விளைவாக எழுந்த கோட்பாடே அஹிம்சை.

போரால் ஏற்பட்ட அழிவைக் கண்ணுரக் கண்டுகளைத்த உலகுக்கு அஹிம்சை மூலமே விமோசனம் உண்டென்பதை அவர்கள் நிரூபித்தனர்.

அஹிம்சை துன்பத்தை ஏற்று. துன்பம் விளைவிப்பவரை வெறுக்காது அவருடைய மனதை மாற்றுமளவிற்கு துன்பத்தைத் தாங்கும் சக்தியை வளர்க்க வல்ல பேராற்றல்" என்ற விளக்கம் உரையாடலின் முகவுரைபோன்றது.

இதனை வெட்டி பேசுமளவிற்கு சீடன் சந்தேகம் தெரிவிக்கிறார்.

"தனிப்பட்ட ஒருவர் இவ்வித அபூர்வ சக்தியை உடையவராகலாம். புராணத்திலும் வரலாற்றிலும் இத்தகைய தெய்வீக புருஷர்களை நாம் காண்கின்றோம். சாதாரண மனிதனோ, அவனுடைய சமூகமோ இதனை ஒரு வாழும் தத்துவமாகக் கொள்வது சாத்தியமல்ல" என்கிறார் சீடன்.

மகாத்மா; உலகவரலாற்றை நாம் உன்னிக் கவனித்தால் மனிதன் இன்றைய உயர் நிலையை அடைய முடிந்தது. அஹிம்சையாலே என்பது தெளிவாகிறது மனிதனை மனிதன் பிடித்துத் தின்ற காலம் போய், பனிதன் வேட்டையாடி உணவு தேடினான்; அந்த மிருக வாழ்வில் வெட்கம் கொண்டு விவசாயத்தில் ஈடுபட்டு பண்புள்ள வாழ்வுக்கு அடி கோலினான். கிராமங்கள் நகரங்கள் நாகரிக வாழ்வு என்று நாம் காணும் அமைப்பு அனைத்தும் அஹிம்சையின்பலனே! அஹிம்சை இன்றேல், இன்றைய பனித வர்க்கம் கடந்த காலத்தில் உயிரினங்கள் அழிந்தது போல இன்று முற்றாய் அழிந்திருக்கும்.

சீடன்; தாங்கள் மனதிற் கொண்டிருக்கும். உன்னத இலட்சியம் சமூக அடிப்படையில் பயிற்றப்படும் ஆற்றலாக வளர்வது முடியாதகாரியம்.

மகாத்மா: அதனை நான் மறுக்கிறேன் சாதாரண குடும்பத்தின் வலிமையை

## மகாத்மா காந்தியுடன் சீடன் நடாத்திய சம்பாஷணை

பாருங்கள் தகப்பன் ஒரு தவறு காரணமாக மகனை அடித்தால், மகன் தகப்பனைத் திருப்பி அடிப்பானா? அடியின் தாக்கத்தால் மகன் அடங்குவதில்லை தகப்பனின் அன்புக்கு பங்கம் விளைத்து விட்டால் அவன் தவறை உணர்கின்றான்; குடும்பத்தைக்காக்கும் தர்மம் நாட்டைக்காக்க வல்லதே

சீடன்: மக்கள் கூட்டத்துக்கு அஹிம்சை ஒரு புரியாத புதிராகவே இருப்பதே நாம் காணும் அனுபவக்காட்சி.

மகாத்மா: தவறு மக்களில் மட்டுமே; கோட்பாட்டில் அல்ல; நெருப்பில் கை வைத்தால் சுடும், அதற்காக எம்மைப்பாதுகாத்து நெருப்புடன் நாம் பழகுவதில்லையா; பொது மக்கள் பொறுமையின்றி மிருகத்தனமாக பழிக்குப் பழிவாங்க முந்துவதால் அஹிம்சையின் மகத்துவம் குறையாது.

சீடன்: குரோதம், கோபம், வெறுப்பு போன்ற தீயகுணங்களுக்கு நாம் இலகுவில் ஆளாகின்றோம். இது தினசரி வாழ்வின் அனுபவம்; எனவே இவற்றை நீக்கி இந்த மிகக் கடினமான சக்திபெறப்பயிற்சி பெறுவது எப்படி?

மகாத்மா: என்னுடன் உப்புச்சத்தியாக்கிரகத்துக்கு வந்த ஆயிரக்கணக்கான பெண்கள் சட்டத்தை மறுத்து உப்பை அபகரித்தது எவரிலும் கொண்ட குரோதத்தால் என்று கொள்ளலாமா? சாம்பரான் என்ற இடத்தில் அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த ஆயிரம் ஆயிரம் விவசாயிகள் தோட்டத்துரைகளையோ, ஆட்சியாளரையோ வெறுப்பில் எதிர்த்தவர்களா? தலைவர்களில் கொண்ட நம்பிக்கை காரணமாக நியாயமற்ற சட்டங்களைத் தீவிரமாக எதிர்த்தார்கள், தாக்குண்டார்கள் ஆனால் தோல்வியடையவில்லை.

சீடன்: தாங்கள் குறிப்பிடும் வெற்றி சாதாரண மக்களுக்கு முடியாத காரியம் 'அஹிம்சா தர்மம்' படைபலத்திலும் ஆற்றல் மிக்கது; ஆனால் அவ்வித ஆற்றல் பெற்றவர் அபூர்வ மனிதர் சாதாரண மக்கள் படையைத் திரட்டுவது அஹிம்சைப் போராட்டத்துக்கு நடைமுறையில் இயலுமா?

மகாத்மா: இதற்கென ஒரு பிரத்தியேகமான பயிற்சி முகாம் எங்கும் கிடையாது; ஆழ்ந்த அறிவும், இமயம் போன்ற பொறுமையும், வஞ்சனையற்ற தூய வாழ்வை விருத்தி செய்வதாலும் ஒருவன் நிலையான வெற்றியைப் பெற முடியும். பௌதிகம் இரசாயனம் போன்ற விஞ்ஞான படிப்புக்களுக்கு ஒருவன் தன்வாழ்நாள் முழுதையும் செலவிட முடியுமானால், மனிதவர்க்கம் அறிய வேண்டிய இந்த ஆன்மிக சக்தியை வளர்க்க எத்தனை அதிககாலம் தேவையென்பது புலப்படும் விண் அரசென்பது அஹிம்சை என்றறிக,

"சீடன்: சுதந்திரப் போருக்கு பொதுமக்கள் புரட்சிதான் ஒருவழியென்றால், அதில் நிகழும் அக்கிரமங்கள் அனைத்துக்கும் அஹிம்சை ஈடுகொடுக்குமா? நீங்கள் கூறும் உயர்ந்த நெறி இத்தகைய நிகழ்ச்சிக்கு எவ்வாறு பொருந்தும்?

மகாத்மா: இன்றைய கட்டத்தில் நீர் கூறுவது விபரீதமல்லவா? வன்செயல்கள் நிகழ்வதற்கு பொதுமக்கள்பொறுப்பல்ல, படைபலமும், ராணுவ நடவடிக்கைகளும், தலைவர்களின் அமைப்பில் உண்டாகும் தீமைகள், படித்தவர்கள், சிந்தனையாளர் தீட்டும் திட்டங்களே ராணுவ அமைப்பாக உருவெடுக்கின்றன. சண்டையில் காணும் பராக்கிரமமும் கண்டிப்பும், அஹிம்சை நெறியில் பன்மடங்கு இடம்பெறுவதற்கு என்ன தடை? ஒரு சிலரின் தலைமையில் சத்தியாக்கிரகிகள் ஆயிரக் கணக்கில் திரள முடியும் இதனை நாம் செய்துகாட்டினோம்! மரணத்துக்கு அஞ்சாத மக்கள் பல்லாயிரக்கணக்கில் எங்கள் போராட்டத்தில் பங்குபற்றவில்லையா?

சீடன்: ஆம் மகாத்மாஜீ! தமது நாட்டைக் காப்பாற்ற, மக்கள் சுதந்திரத்தைப் பெற சண்டையில் பங்கு கொள்ளும் படைவீரர் தான் உயிரைத் தியாகம் செய்கிறார்கள். மரணத்துக்கு அஞ்சாதவர்கள் தானே!

மகாத்மா: பாதுகாப்புச்கும் சுதந்திரத்துக்கும் இவை போன்ற உயரிய லட்சியத்துக்கும் வன்செயல் சட்டத்துக்கு மீறும் செயலல்ல; அத்துடன் அது ஒரு தீரமான செயல் என்றும் சொல்லலாம் கோழையாக அடிமையாக வாழாவிருத்தலைக் காட்டிலும் மேலானது இவ்வித வன்செயல். ஒரு இனம் பலவீனப்பட்டு அழிவதிலும் பார்க்கப் போர் தொடுத்து அதில் வெற்றிபெறு

(4-ம் பக்கம் 3-ம்கலம் பார்க்க)

## இயம்பினை ராம நாமம்

அன்பினால் உலகை ஈர்த்தோய் அஹிம்சையால்
வீரம் சேர்த்தோய்
பண்பினால் பிறரை வென்றோய் பாரெலாம் போற்ற
வாழ்ந்தோய்
நன்மைசேர் இதிகாசங்கள்நயம் மிகுபுராண நூல்கள்
சொன்னவை அனைத்தும் வாழ்விற் சோதனை செய்து
பார்த்தோய்

★ ★ ★

நாளெலாம் முயன்றுபெற்ற நன்மைசேர்
சுதந்திரத்தால்
ஏழையர் உயர்தல் வேண்டும் இனங்களுள் இணக்கம்
வேண்டும்
ஞாலமே வியக்கும் கல்வி நாடெலாம் பரவவேண்டும்
தோழமை உள்ளம்வேண்டும் என்றிட்டாய்
அண்ணல்நீயே

★ ★ ★

தம்புறுசாதி பேதச் சகதியால் பாரதத்தின்
ஐக்கியம் அழிதல் கண்டே அளப்பரும் துயரம்
கொண்டே
ஒப்புறு சமுதாயந்தான் உருக்கொள முயற்சி
செய்தோய்
இப்புவி நீத்தபோதும் இயம்பினை ராமநாமம்

— ம. பார்வதிநாதசிவம்


### றீகல் மினி

தினசரி 10-15, 1-15 மட்டும்.
பாண்டியன். , ரேவதி நடிக்கும்
பாரதிராஜாவின்
**புதுமைப் பெண்**

### லிடோ சினிமா

தினசரி 10-30, 2-00
சிவாஜி-கே ஆர் விஜயா ரஜனி
**ஜஸ்ரிஸ் கோபிநாத்**

### வெலிங்டன்

(யாழ் நகர்)
10-30, 2-15.
கமல் - மாதவி
**டிக் டிக் டிக்**
(கலர்)


### தவறிவிட்டது

எனது

**அடையாள அட்டை, திறப்பு கோர்வைகளும்**

அடங்கிய கைப்பை, காரை. / யாழ். மினி பஸ்ஸில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப் படும்.

**பொ. செந்தில்நாதன்,**
77, வேம்படி றோட், — யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 231 8 1588

### வல்லிபுர ஆழ்வார் ஆலய

### 9–ம் வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் 4-02-1985 திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும் என்பதை அங்கத்தவர்களுக்கு தனித்தனி அழைப்பிதழ் மூலம் அறிவிக்கப் பட்டுள்ளது.

மகாசபை

1547

### 61ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்

மன்னார் 10ம் கட்டை உயிலங்குளம-
சரஸ்வதி ஸ்ரோஸ் உரிமையாளர்கள்

**திரு. சின்னத்தம்பி–சுப்பிரமணியம்**

ஆண்டவன் படைப்பு: 24-12-1924
ஆள்வோன்பறிப்பு: 04 12 1984

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத்தந்தையே!ஒரு கணப்பொழுதேனும் உங்களை மறக்கமுடியாது கலங்கி நிற்கிறோம். சைவத்தின் பெருமைகளை கனிவோடும், பரிவோடும் எடுத்துரைத்து இன்று இறைவனுடன் கலந்துநிற்கும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி கண்ணீரால் அஞ்சலி செலுத்தும்,

மனைவி பிள்ளைகள், சகோதரி மைத்துனர்மார், மைத்துனிமார், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள்.

02-02-85 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளில் கலந்து அவரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்க வேண்டுகிறோம். [1587]

### 61-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியை அழைப்பும்

**திரு. அரியபுத்திரர் திருநாவுக்கரசு**

(மன்னார் 10-ம் கட்டை உயிலங்குளம்
சரஸ்வதி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

ஆண்டவன் படைப்பு 10-04-1935
ஆள்வோன் பறிப்பு 04-12-1984

தாய் தந்தையரை விட்டு தாய் மாமனிடம் தஞ்சம் புகுந்திருந்து அவரே தஞ்சம் என்று அவர் பின்னே சென்றீரோ, எம்மை எல்லாம் நல்வழிப்படுத்திவிட்டு எம் ஒளியினை அணைத்துவிட்டு இருட்டறையில் வாழ விட்டுச் சென்றுவிட்டீர்கள்! இனி நமக்கு யார் துணை? உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி கண்ணீரால் அஞ்சலி செலுத்தும்,

அன்பு மனைவி, பிள்ளைகள், பெற்றோர், சகோதரர்கள, மாமி, மைத்துனர் ள், மைத்துனிகள், நண்பர்கள், உறவினர்கள்.

02-02-85 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியையில் கலந்து அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்க வேண்டுகிறோம். 1586


1 ஸ்பெயின் பிரான்ஸ் செல்வதற்கான சகல பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.
2 குறைந்தசெலவில் கூடிய விரைவில் BERLIN செல்வதற்கான ஒழுங்குகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.

**AIR-TRANSIT**

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99–2/56 B கபூர் பில்டிங்
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290) ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

## மணிவாக்கு

சாவுக்கு மத்தியில் நாம் வாழுகிறோம். ஒரு கண்ணிமைப் பொழுதில் எமது சொந்தத் திட்டங்கள் ஒன்றுமேயில்லை என்று ஆகிவிடும். ஆனால், கடவுளுக்காகவும் அவருடைய திட்டங்களுக்காகவுமே வேலை செய்கிறோம் என்ற எண்ணம் ஏற்படுமாயின், அதனால் நமக்கு மலையைப் போன்ற அசைக்கமுடியாத வலிமை உண்டாகும்.

— மகாத்மாகாந்தி

# நமதுநோக்கு

## புதுடில்லிப் பிரகடனம் ஆண்டிகள் மடம்?

சரியாக 37 வருடங்களுக்கு முன் புதுடில்லியில் மகாத்மா காந்தி கொல்லப்பட்டார்; உலகம் அதிர்ச்சி அடைந்தது; ராமநாமத்தை உச்சரித்தவாறே உயிர் துறந்த மகாத்மாவின் உன்னத லட்சியம் இன்று உலகுக்கு எவ்வாறு பயனளிக்கிறது.

இன்று பல நாடுகளில் பாதிக்குமேற்பட்டவர் இளைஞர்; குறிப்பாக இந்தியாவிலும் இலங்கையிலும் இந்த உண்மையை உணராதமட்டில் இன்றைய அழிவு நிலைக்கு விமோசனம் கிட்டாது.

இலங்கையில் பெரும்பாலான இளைஞருக்கு மகாத்மாகாந்தி யார் எதற்காக வாழ்ந்தார் எவ்வாறு மறைந்தாரென்பது தெரியாது; அவருடைய உடையைக் கொண்டு அவர் ஒரு தமிழ் நாட்டுத் தலைவர் என்றும் தப்பபிப்ராயம் கொள்வது இங்கு சாதாரணம்.

தனிமனிதனுக்கு சமூகத்துக்கு நாட்டுக்கு பாதுகாப்பு அரசாங்கச் சட்டம் என்று வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்தி வந்தோம்; இன்று அரச சட்டமே பாதுகாப்பளிக்கவில்லை என்பதை கண்ணாரக் கண்டுவிட்டோம். அதுமட்டுமல்ல அநியாயமான சட்டத்தை எதிர்ப்பதே நீதிக்கு வழிவகுக்கும் என்று எண்ணும் தைரியமும் பெற்றுவிட்டோம்.

ஆனால் இவ்வித தைரியம் திசைதிருப்பப்பட்டால் போராட்டம் அமைதியில் மலராதென்றதை நாம் உணரவில்லை.

இது ஒரு நாட்டை சமூகத்தைப் பொறுத்தளவில் உண்மையானது இதேபோல் உலகில் சமாதானம் நிலவவேண்டுமானால், நிலைத்திருக்கும் சமாதானத்தை பெறவேண்டுமானால் போரை ஒழிக்க வேண்டுமென்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

ஜெனிவாவில் நடைபெறுகின்ற அணுஆயுதப் படைக்குறைப்பு மாநாடு வெற்றி பெறுவதானால் சோவியத் ரஷ்யாவும், ஐக்கிய அமெரிக்காவும் நடத்தும் பேச்சுக்களில் உடன்பாடுகிட்டவேண்டும்.

இந்த உடன்பாடு மட்டுமே உலக அமைதியை, தேசங்களிலே சமாதான வாழ்வை, சமூகங்களுக்கிடையே நட்பு, சமூகத்திலே ஒற்றுமை — இவைபோன்ற நன்மைகளைக் கொண்டுவர மாட்டாது.

பாதுகாப்புப் பற்றி இக்காலத்தில் நிறையப் பேசியும், எழுதியும் வரும் நாம், பாதுகாப்பான வாழ்வு தர்மம் போல், நீதி போல் வீட்டில் தொடங்க வேண்டும் என்பதை உணர்வதில்லை.

உயிருள்ள மனிதன் யார் என்று மகாத்மா காந்தி அடிக்கடி நினைவுறுத்திவந்தார். ஒழுக்கம் தவறாமல் வாழ்ந்தால் தான் மனிதன் உயிர்வைத்துக் கொண்டிருப்பதற்குப் பொருள் உண்டு. ஒழுக்கம் தவறினால் அதைவிடச் சாவதே நல்லது என்பதே இன்று நாம் மகாத்மாவின் பெயரால் நினைவு கூர வேண்டியது.

தேசம் அபிவிருத்தியடைய வேண்டும், அதற்குரிய திட்டம் வேண்டும், செயலாற்றும் மனிதர் வேண்டும்; தேவையான நிதி வேண்டும்; இவற்றால் அபிவிருத்தி பெருகினால் வாழ்க்கைத்தரம் உயரும் என்ற பல்லவியே எங்கும் பாடப்படுகிறது; இவை அனைத்திற்கும் உயிர் கொடுப்பது தனிமனிதனின் ஒழுக்கம், சமூகத்தின், நாட்டின் ஒழுக்கம் என்பதை எவரும் வற்புறுத்துவதில்லை.

மாணவர்களுக்கு பரிசளிப்பு விழாவில் வெறும் பேச்சாகப் பேசப்படும் விடயம் ஒழுக்கம்.

37 வருடங்களுக்கு முன் உலகம் கண்ட மகானின் மரணம் புதுடில்லியில் நடைபெற்றது. அன்று அது உலகின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது.

இன்று புதுடில்லியில் வெளியான பிரகடனம் அணுஆயுத உற்பத்தியை ஒழிக்க வேண்டுமென்ற நோக்கம் கொண்டதே. வல்லரசுகளை நிர்ப்பந்திக்க அணிசேரா இயக்கத்தின் பெருமுயற்சி இது. இதற்கொரு நல்ல வருங்காலம் உண்டு.

'ஆறு ஆண்டிகள் சேர்ந்து மடம் கட்ட முயல்கின்றனரா' என்ற கேலிக்கும் இடமுண்டு ஆனால் உலக சமாதானத்துக்கு ஒரே ஒரு வழி - தனிமனிதனின், நாட்டின் ஆன்மீக சக்தி என்று கூறி நிரூபித்துக் காட்டிப் போன மகாத்மாவின் பெயரில் இந்தப் பிரகடனம் பொருத்தமானது.

### நல்லூரில்....

[1-ம்பக்க 2ம்கலத்தொடர்ச்சி]

வரில் ஒருவர் ராணுவத்தைக் கண்டு ஓடவே அவரை ராணுவத்தினர் துரத்திப் பிடித்தனர். ஓடாமல் நின்றவரை விட்டுவிட்டனர்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone number 22389-24126.

# கிளிநொச்சியில் இடம்பெற்றசில சம்பவங்கள்

[கிளிநொச்சி நிருபர் கே. வி. கே. திருலோகமூர்த்தி]

கண்டியிலிருந்து மரக்கறிகளை ஏற்றிவந்த ஈ. எல். எவ். லொறியொன்றை கிளிநொச்சிப் பள்ளிவாசலில் வைத்து இனந்தெரியாத இளைஞர்கள் கடத்திச்சென்றுள்ளனர். மரக்கறிகளை இறக்கிவிட்டே இந்த லொறியைக் கடத்தினர்.

### மக்கள் வெளியேறினர்

முறிகண்டி ரயில்விபத்தையடுத்து புத்துவெட்டுவான் பகுதியில் வசித்தமக்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர். ஆயுதப்படையினரின் அச்சுறுத்தலையடுத்தே இவர்கள் வெளியேறியதாகக் கூறப்பட்டது.

### கிளிநொச்சி வழமைக்கு திரும்புகிறது

கிளிநொச்சி கடந்தசில நாட்களாக நிலவிய பதட்டத்தையடுத்து நேற்று நிலைமை வழமைக்குத் திரும்பியது. பாடசாலைகளுக்கு கணிசமான மாணவர்கள் சமூகமளித்திருந்தனர். சந்தையிலும் பெருமளவிலான மக்கள் காணப்பட்டனர்.

### பரந்தன் சம்பவம்

பரந்தனிலுள்ள தனியார் வர்த்தக நிலையமொன்றிலிருந்து பெருந்தொகையான பற்றரிகளும், மற்றும் பல பொருட்களும் இனந்தெரியாதவர்களினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

பரந்தனிலுள்ள சில வீடுகளும், ஆலயமொன்றும் நேற்று முன்தினமிரவு சேதப்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### முந்திரிகைத் தோட்டத்தில் கொள்ளை

ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத கோஷ்டியொன்று பூநகரியிலுள்ள முந்திரிகைத் தோட்டத்திலிருந்து நேற்று முன்தினமிரவு ட்ராக்டர் ஒன்றையும், மற்றுமொரு வாகனத்தையும், வேறும் சில பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

### புற்றுநோய்...

[1-ம்பக்க4-ம்கலத்தொடர்ச்சி]

குறிப்பிட்ட உபகரணங்கள் பழுதடைந்ததால் இங்குள்ள உபகரணம் எடுத்துச்செல்லப்பட்டிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்களிலிருந்து அறிய முடிந்தது.

சுமார் ஒன்றரைவருஷத்துக்குமுன்னர் இச்சிகிச்சை நிலையம் கட்டப்பட்டிருந்தும் சிகிச்சைவைத்திய நிபுணர் இன்றி இதுவரை இயங்காமலிருந்து வருவதுகுறிப்பிடத்தக்கது. (யா)

### அனுராதபுரம் வரை மட்டுமே ரயில் சேவை!

[கொழும்பு]

வடபகுதி ரயில் சேவையில் புதியமாற்றம் எதுவும் இடம் பெறவில்லை. என்று புகையிரத பகுதியின் உயர் அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து அநுராதபுரம் வரை மட்டுமே [இன்ரசிற்றி] ரயில் சேவைகள் நடைபெறுகிறது என்று அவர் தெரிவித்தார்.

### அகதிகளுக்காக!

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட அகதிகளுக்காக இன்று முதல் பெப்ரவரி 8ம் தேதிவரை யாழ். மாணவர்கள் உண்டியல் மூலம் வீடுகளிலும், பாடசாலைகளிலும், நிதிமற்றும் பொருட்கள் சேகரிப்பார்கள் என தமிழ் மாணவர் பிரதிநிதிகள் குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. (மா)

### இன்று மகாத்மா...

(3ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

வது ஆயிரம் மடங்கு மேலானதாகும். ஆனால் அஹிம்சை நெறிக்கு ஒப்பானதென்று கொள்ள முடியாது. ஒருவரை அழிப்பதிலும் பார்க்க தான் அழியத் தயாராகவிருப்பது உண்மையான தீரம். தீமைக்கும் தீமைபுரிபவனுக்கும் உள்ள வேறுபாட்டை விளங்க வேண்டும். தீமை புரிபவனைத் தாக்காதே; தீமையைத் தாக்கி வெல்.

தீமையை நன்மையாலும், குரோதத்தை அன்பாலும், பொய்மையை வாய்மையாலும் இம்சையை அஹிம்சையாலும் வெல்ல மனிதன் பழகிக்கொள்ளும் காலம் வெகுவிரைவில் வரும்; மாற்று வழிஇல்லை; உலகம் முற்றாக அழிந்து போவதை யாரும் நினைக்க முடியுமா? (ஆதாரம் 'மகாத்மாவின் சித்தாந்தம்')

### பலியான...

(1ம் பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

இரா உதயகுமார், உதவி லெப்டினன் ஸ்ரனிஸ் இருவரும், அரியாலையில் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் வீரமரணமெய்திவிட்டார்கள். விடுதலைப் போராட்டம் உச்சக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் இந்நிலையில் இருவரும் எம்மை விட்டகன்றது பேரிடியாகும் என்று அத்துண்டு பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது உதவி லெப்டினன் ஸ்ரனிஸ் சார்ள்ஸ் 'ரெலி' இயக்கத்திலிருந்து தங்கள் இயக்கத்தில் சேர்ந்தவர் என்றும் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஹட்டன்...

(1-ம்பக்க 3ம்கலத்தொடர்ச்சி)

துப்பாக்கி முனையில் பணயம் வைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

உள்ளே நடந்தவைபற்றி எதுவுமறியாத வேலையாட்கள் தங்களுக்குப் பணித்தபடி இரு இரும்புப் பெட்டகங்களையும், ட்ராக்டரில் ஏற்றியபின்னர் உள்ளேநின்ற இருவரும் ட்ரக்டரை கடத்திச்சென்றதாகவும் கூறப்படுகிறது.

இதன்பின்னர் வங்கி முகாமையாளரும், ஊழியர்களும் வெளியில்வந்து பார்த்தபோது இரும்பு பெட்டகங்களை ஏற்றிய ட்ராக்டரைகாணவில்லை என்று கூறப்படுகிறது.

பணயம் வைக்கப்பட்ட ஊழியர் ஒருவர் அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும், அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டதாகவும், வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் நடந்தபோது முனீஸ்வரன் வீதியிலும் பஸ் நிலையத்திலும் வாகனங்கள், மக்கள் நடமாட்டம், வழக்கம் போல் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (க)

### எழும்பூரில்...

[1ம்பக்க 5மகலத்தொடர்ச்சி]

வட சென்னை லோக சபைத் தொகுதியில் தி. மு. க. வேட்பாளர் திரு. என். வி. என். சோமு காங்கிரஸ் ஐ. வேட்பாளரைவிட இரண்டு இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் முன்னணியில் இருப்பதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறின.

### வேம்படியில் 60 மாணவிகள்

(யாழ்ப்பாணம்)

5-ம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றவர்களில் 60 மாணவிகள் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்று வேம்படி மகளிர் கல்லூரியில் அனுமதிபெற விண்ணப்பித்தவர்களில்தெரிவு செய்யப்பட்ட 60 பேருக்கான பட்டியல் ஒன்று கல்லூரி அதிபருக்கு கல்வித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### இந்திய...

[1ம்பக்க 2ம்கலத் தொடர்ச்சி)

மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள்.

படகுகளில் சில பழுதடைந்திருந்தமையால் கட்டி இழுத்துச் செல்லப்பட்டனவாம். காலநிலை சீராகவில்லாமையால் நேற்று முன்தினம் அவை இந்தியஅதிகாரிகளிடம் கையளிக்கமுடியாமல் போய்விட்டதாக இலங்கை அதிகாரிகள்கூறினர். (து)

### தடைபட்ட...

(1ம்பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

பாடங்களையும், அந்தந்த பரீட்சை நிலையங்களில் பெப்ரவரி இறுதியில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திலும் மற்றும் சிலமாவட்டங்களில் சில நிலையங்களில் பரீட்சை குழப்பப்பட்டிருந்தன.

## மரண அறிவித்தல்

### T. K. இராஜரத்தினம்

ஆனைப்பந்தி யாழ்ப்பாணம் பி எஸ். டிஸ்பென்சறி உரிமையாளரும், முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினருமான T. K. இராஜரத்தினம் காலமானார் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

1605

## மரண அறிவித்தல்

### சுந்தரம் சிவசோதி

சுந்தரம் சிவசோதி (இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர்) காலமானார். அன்னார் காலம் சென்ற சுந்தரம் தம்பதிகளின் அன்புமகனும் வேதவல்லியின் அன்புக்கணவரும், சித்திரா, சுமித்திரா ஆகியோரின் அன்புத்தந்தையும், தர்மராசா, தவராஜன் ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற நாகேந்திரன் கனகாம்பிகை, கணேஸ்வரன், நடேசன், ஞானப்பிகை, மகேசன், கணேசன் சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும். ரிசிகேசன், துசிதா, நிரஞ்சனா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-1-85 காலை 10 மணிக்கு சங்கானையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

1598